

பாடம் 2

ஏப்ரல் 6 – 12

# நாம் செய்யும் தெரிவுகள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *எபேசியர் 1:1-4; மத்தேயு 22:35-37; 7:24,25; நீதிமொழிகள் 18:24; 1கொரிந்தியர் 15:33; பிரசங்கி 2:1-11.*

**மனன வசனம்:** கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம். யோசுவா 24:15.

வாழ்க்கையில் நாம் தூங்கி விழிப்பதிலிருந்து மறுபடியும் தூங்கச்செல்லும்வரை பல தெரிவுகளைச் செய்கிறோம். அதைக்குறித்து யோசிக்காமலேயே தெரிவுகளைச் செய்கிறோம்.

சிலதெரிவுகள்எளிமையானவை;வழக்கமாகசெய்யக்கூடியவை. வேறு சில தெரிவுகள் வாழ்க்கையை மாற்றக்கூடியவை. நமக்கு மாத்திரமல்ல நம் குடும்பங்களுக்கும் முக்கியமானவை. எனவே, நம்மையும் நம் குடும்ப உறுப்பினர்களையும் பாதிக்கக்கூடிய தெரிவுகளைச் செய்வதற்கு முன்னர் யோசிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்?

நம்மில் எத்தனை பேர் இதற்கு முன் செய்த தவறான தெரிவுகளைக் குறித்து வருந்தி வருகிறோம். நம்மில் எத்தனை பேர் தவறான தெரிவுகளின் விளைவுகளைச் சந்தித்திருக்கிறோம். நல்ல வேளையாக தவறாகத் தெரிவுசெய்தாலும் மன்னிப்பு இருக்கிறது; மீட்பு இருக்கிறது; அதற்கு நிவாரணமும் இருக்கிறது.

நாம் எவ்வாறு தெரிவு செய்யவேண்டும்? நம்முடைய தெரிவுகள் எவ்வாறு நம் குடும்பத்தைப் பாதிக்க முடியும்? இந்த கேள்விகளுக்கான பதிலை இவ்வாரத்தில் படிக்கப்போகிறோம்.

*2019, ஏப்ரல் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு** ஏப்ரல் 7

# சுயாதீன சித்தம், சுயாதீன தெரிவு

ஒரு நபர் பிறப்பதற்கு முன்னரேயே அவர் இரட்சிக்கப்படுவாரா, மாட்டாரா என்பதை தேவன் தேர்வுசெய்திருப்பதாக சில கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அது உண்மையானால், 'சிலர் இரட்சிக்கப்படாமல் போவதற்குக் காரணம் தேவனே. தேவன் தம்முடைய ஞானத்தின்படி அவ்வாறு செய்கிறார். அந்த மனிதனுடைய தெரிவு எதுவாக இருந்தாலும் அவனுக்கு தண்டனைதான் கிடைக்கும்' என்று அர்த்தமாகும்.

செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை அவ்வாறு நம்பவில்லை. நாம் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். உலகம் உண்டாவதற்குமுன்பே நாம் நித்திய ஜீவனைப் பெற வேண்டுமென்று அவர் கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்துகொண்டிருக்கிறார்.

**கேள்வி: தேவன் நம்மைத் தெரிந்துகொண்டார் என்பதைப்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன? எபேசியர் 1:1-4; தீத்து 1:1, 2; 2தீமோத்தேயு 1:8,9.**

இந்தச் செய்தி நல்லதுதான். ஆனாலும் சிலர் தொலைந்துபோவார்கள். தேவன் மனிதர் எல்லோரையும் தெரிந்துகொண்டாலும் மனிதனுக்கு சுயாதீன சித்தத்தை, சுயாதீன தெரிவைக் கொடுத்திருக்கிறார்.

**கேள்வி: சுயாதீன சித்தம்பற்றி மத்தேயு 22:35-37 என்ன கற்பிக்கிறது?**

தம்மை நேசிக்கும்படி தேவன் நம்மை வற்புறுத்துவது இல்லை. அன்பானது சுயாதீனமாகக் காட்டப்பட்டால்தான் அதை அன்பு என்று சொல்லமுடியும். எவரையும் வற்புறுத்தாமல் தம்மிடம் அன்பு காட்டும்படிச் செய்ய, மக்களைத் தேடி தேவன் வருகிறார். இதை உணர்த்துகிற சம்பவங்கள் அடங்கியதுதான் வேதாகமம். இந்த உண்மையை இயேசுவின் வாழ்விலும் ஊழியத்திலும் நாம் பார்க்கமுடிகிறது. தங்கள் சுயாதீன சித்தத்தைப் பயன்படுத்தி, சிலர் அவரை நேசித்தார்கள்; மற்றவர்கள் அவரைக் கொல்ல நினைத்தார்கள்.

நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கே தேவன் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அந்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதற்கான தெரிவை நாம் செய்தாகவேண்டும். நாம் செய்கிற எல்லாத் தெரிவுகளிலும் தேவனைச் சேவிக்கத் தெரிந்துகொள்கிற தெரிவுதான் மிகவும் முக்கியமானது.

நம்முடைய தெரிவுகளால் நம் குடும்பத்திலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. எவ்வாறு?

# சரியான தெரிவுகளைச் செய்தல்

சரியானதைத் தெரிவுசெய்யவேண்டும் என்பது முக்கியமானது. தவறானதைத் தெரிந்துகொண்டால் அது எவ்வாறு நம் வாழ்வையும், பிறர் வாழ்வையும் பாதிக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். சரியான தெரிவைச் செய்வது எப்படி என்பதுதான் கேள்வி.

**கேள்வி: சரியான முடிவுகளை எடுப்பதற்கு நமக்கு உதவக்கூடிய சில பொதுவான வழிமுறைகளை பின்வரும் வசனங்கள் நமக்குத் தருகின்றன. இந்த வழிமுறைகள் என்ன?**

**1தெச 5:17; யாக் 1:5** ______________________________

______________________________

**ஏசா 1:19; மத் 7:24,25** ______________________________

______________________________

**சங் 119:105; 2தீமோ 3:16** ______________________________

______________________________

**நீதி 3:5,6; ஏசா 58:11** ______________________________

______________________________

**நீதி 15:22; 24:6**______________________________

______________________________

நாம் செய்கிற தெரிவுகளினால், நாம் தேவனுடைய பிரமாணத்தையும், அவருடைய நியதிகளையும் மீறக்கூடிய சூழ்நிலை எவ்விதத்திலும் ஏற்படக்கூடாது. அதனால் நாம் தீர்மானம் செய்யும்போது, ஜெபத்தில் ஆண்டவரிடம் கேட்டு தீர்மானிக்கவேண்டியது மிகவும் அவசியம். நம்முடைய தெரிவுகளை தேவனிடம் தத்தம் செய்யவேண்டும். நம்முடைய தெரிவுகளால், தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும். அவருடைய விருப்பத்திற்கு எதிரான நம்முடைய ஆசைகளை, விட்டுவிடத் தயாராக இருக்கவேண்டும். நல்ல ஆலோசகர்கள் இதற்கு உதவி செய்யலாம். தேவன் நம்மேல் அன்புவைத்திருக்கிறார். சிறப்பான ஒன்றையே, நமக்கு கொடுக்க ஆசைப்படுகிறார். விசுவாசத்தோடும், தாழ்மையோடும் நம் வாழ்க்கையை அவரிடம் ஒப்படைத்தால், நாம் செய்கிற தெரிவுகளையும் அவரிடம் விட்டுவிடலாம். இந்த அறிவு நமக்கு உறுதியைத் தருகிறது.

உங்கள் வாழ்க்கையின் முக்கியமான தெரிவுகளை, நீங்கள் எவ்வாறு செய்கிறீர்கள்? சரியான தீர்மானம் செய்ய ஆவிக்குரிய விதத்தில் எவ்வாறு முயற்சி செய்கிறீர்கள்?

______________________________

# நண்பர்களைத் தெரிவுசெய்தல்

நம் நண்பர்களைத் தெரிந்துகொள்ளுதல், நாம் செய்கிற தெரிவுகளில் மிகவும் முக்கியமானது. நண்பர்களை உருவாக்கவேண்டும் என்று நாம் செயல்படுவது இல்லை. நாம் யாரோடு நேரம் செலவிடுகிறோமோ, அவர்கள் நம் நண்பர்கள் ஆகிறார்கள். பொதுவாக, நாம் செய்ய விரும்புவதை அவர்களும் செய்ய விரும்புகிறவர்களாக இருப்பார்கள்.

**கேள்வி: நண்பர்களை தேர்ந்தெடுக்கும் விதத்தில், நாம் கடைப்பிடிக்க வேண்டிய என்ன நியதிகளை பின்வரும் வசனங்கள் சொல்கின்றன? நீதி 12:26; 17:17; 18:24; 22:24, 25.**

நமக்கு நண்பர்கள் வேண்டுமென்றால் நாம் நட்புபாராட்ட வேண்டும் என்று நீதிமொழிகள் 18:24 சொல்கிறது. சிலர் தனியர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய தவறான மனப்பான்மைதான் அதற்குக் காரணமாக இருக்கும். மிகச்சிறந்த மனிதர்களுக்கும்கூட சில கெட்ட குணங்கள் இருக்கும். அவற்றைப் பார்த்து ஓடாதவர்களாக, நம்முடைய நண்பர்கள் இருக்கவேண்டும். ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்ளுதல் தான் நட்புக்கு இலக்கணம். மற்றவர்களுடைய குறைகளைக் கண்டுகொள்ளாமல், அவர்களை நேசிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். அதுதான் கிறிஸ்துவின் சிந்தை. தாழ்மையின் சிந்தையை வளர்த்துக்கொள்ள வேண்டும். பொறுமையான கனிவோடு, மற்றவர்களை அணுகவேண்டும். அப்போது குறுகலான, சுயநலம் அழிந்து போகும்; பரந்தமனதோடு செயல்படுபவர்களாக நாம் மாறுவோம்.

தாவீது-யோனத்தான் நட்பானது நட்புக்கு சிறந்த உதாரணம் ஆகும். யோனத்தானின் தகப்பனாகிய சவுல் என்பவர் இஸ்ரவேலின் முதல் ராஜா. அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்திருந்தால் சவுலுக்கு பிறகு யோனத்தான் தான் அரசர் ஆகியிருப்பார். தன்னுடைய அழைப்புக்கு ஏற்றவாறு நடக்காததால், அவருடைய சந்ததி சிங்காசனத்தை இழந்தது. சவுல் எனும் ஒரு நபர் தவறான தெரிவுசெய்ததால், அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த யோனத்தான் எனும் இன்னொரு நபர் பாதிப்புக்கு உள்ளானார்.

ஆனால், தாவீதின்மேல் யோனத்தானுக்குக் கோபமோ, பொறாமையோ வரவில்லை. மாறாக, தன்னுடைய தகப்பனாகிய சவுலின் கோபத்திலிருந்து தாவீது தப்பித்துக்கொள்ள உதவினான். யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்மாவோடு ஒன்றாய் இசைந்து இருந்தது என்று வாசிக்கிறோம். 1 சாமுவேல் 18:1. உண்மையான நட்புக்கு என்ன பலமான உதாரணம்!

மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள்(தோழமை) நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். 1 கொரி 15:33. நண்பர்களுடன் உங்களுக்கு உள்ள அனுபவம் எப்படிப்பட்டது? உங்களுக்கு தீங்கு செய்ய அவர்கள் முயலாத போதும், அவர்களால் தீங்கு ஏற்பட்டு இருக்கிறதா? தவறான நண்பர்களால், குடும்ப உறவு எவ்வாறு பாதிக்கப்படலாம்?

# வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்தல்

நீங்கள் உங்கள் நண்பர்களைத் தெரிவுசெய்யும்போது கவனமாக இருக்கவேண்டியது அவசியமென்றால், உங்கள் வாழ்க்கைத்துணையைத் தெரிவுசெய்யும்போது எவ்வளவு அதிக கவனம் அவசியம்! இதில் ஆதாம் ஆசீர்வதிக்கப்பட்டவன். தேவனால் பரிபூரணமான நிலையில் உருவாக்கப்பட்ட ஒரு வாழ்க்கைத்துணை அவனுக்குக் கிடைத்தது. தெரிவுசெய்யவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. ஆனால், நமக்கு தெரிவுசெய்வதில் பிரச்சனைகள் உண்டு. ஏனெனில், நாம் எவரும் பூரணர் இல்லை. அநேகர் இருப்பதால், அவர்களில் ஒருவரைத் தெரிவுசெய்வதும் கடினமாகிறது.

இந்தத் தீர்மானம் முக்கியமானது என்பதால், உதவி இல்லாத நிலைமையில் தேவன் நம்மை விட்டுவிடவில்லை. திருமணத்தைப்பற்றி யோசிக்கும்போது, நாம் மனதில் வைத்திருக்கவேண்டிய சில படிகள் உள்ளன. தேவனோடு உள்ள உறவு, நம்முடைய வாழ்க்கையில் முதலிடம் வகிக்கிறது. அடுத்த இடம் திருமண உறவுக்குத்தான்.

**கேள்வி: திருமணத்தில் சரியான துணையைத் தேடிக்கொண்டிருக்கும் ஒருவருக்கு பின்வரும் வசனங்களில் என்ன ஆலோசனை கொடுக்கப்படுகிறது? சங் 37:27, 119:97; 1கொரி 15:33; யாக்கோபு 1:23-25.**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

திருமணம் செய்வதற்கு சரியான நபரைத் தேடுவதற்குமுன், நீங்கள் முதலாவது சரியான நபராக இருங்கள். 'மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.' மத்தேயு 7:12. நீங்கள் விரும்பும் அனைத்து நல்ல குணங்களையும் உடைய ஒரு துணையை, நீங்கள் கண்டுபிடித்துவிடலாம். ஆனால், மற்றவர்களிடம் நல்ல குணங்களை விரும்பும் நீங்கள் அந்த நல்ல குணங்களை உடையவராக இல்லாவிட்டால், பிரச்சனைகள் எழும்பும்.

இது புதியது அல்ல; திருமண வாழ்வில்மட்டும் அல்ல, பொதுவாக வாழ்வில் இந்தத் தவறு காணப்படுகிறது. மற்றவர்களிடம் தவறு இருப்பதாகச் சொல்லிவிட்டு அதே தவறுகளை செய்கிறவர்களைப் பற்றி, ரோமர் இரண்டாம் அதிகாரத்தில் பவுல் பேசுகிறார். இயேசு சொன்னதையும் பாருங்கள்: 'நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?' மத் 7: 3.

உங்களிடம் இல்லாத ஒரு நற்குணம், மற்றவர்களிடம் இருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்தது உண்டா? இப்படிப்பட்ட எதிர்பார்ப்பைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# ஒரு நடவடிக்கையைத் தெரிவுசெய்தல்

நாம் என்ன வேலை செய்யப்போகிறோம் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பணக்காரராக இருந்தால், இந்தப் பிரச்சினை இல்லாமல் இருக்கலாம். குடும்பத்தை முழு நேரம் கவனிக்கிற மேன்மையான வேலையில் இருந்தாலும் இந்தப் பிரச்சனை இல்லை. மற்றபடி சம்பாதிப்பதற்கு ஒரு வழியைத் தெரிந்துகொண்டே ஆக வேண்டும்.

எந்த வேலையும் செய்யலாம் என்கிற நிலை நமக்கு இருக்கப் போவதில்லை. ஆனாலும், நமக்கு முன் பல வாய்ப்புகள் இருக்கும். அவற்றுள் ஒன்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். குறிப்பாக, இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு இரட்சிப்பு இருக்கிறது என்பதை மனதில் வைத்து தெரிவுசெய்வது நம் வாழ்க்கைக்கு கூடுதல் அர்த்தத்தயும் நோக்கத்தையும் கொடுக்கும். சுருக்கமாகச் சொன்னால், நாம் எல்லாவற்றையும் தேவ மகிமைக்காகச் செய்யவேண்டும்.

**கேள்வி: சாலொமோன் என்ன தவறு செய்தார்? அதே போன்ற தவற்றை நாம் செய்யாதிருக்க, நாம் எப்படி கவனமாக இருக்கவேண்டும்? பிர 2:1-11.**

சாலொமோன் மாட்டிக்கொண்ட அதே கண்ணிக்குள் நாம் சிக்கிக்கொள்ள, நாம் பணக்காரர்களாக இருக்கவேண்டியதில்லை. ‘பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்.’ 1 தீமோத்தேயு 6:10. ஒருவர் ஏழையாக இருந்தாலும், பண ஆசை உள்ளவராக இருக்கலாம்.

நாம் உயிர்வாழ்வதற்கு சம்பாதித்தாகவேண்டும். ஆனால், பணத்தை நாம் விக்கிரகமாக மாற்றாமல் இருக்கலாம். பணக்காரன் ஆவதற்காகக் குடும்பத்தை மறந்து உழைக்கின்ற தகப்பனால், பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. தகப்பனுடைய பாசத்தை அனுபவிக்கவிரும்புகிறபிள்ளைகள், அதற்காகஎளிமையானவாழ்க்கையை ஏற்றுக்கொள்ள நிச்சயம் ஆயத்தமாக இருப்பார்கள். ஆனால் பெரும்பாலும் பாசத்தைவிட வசதியை விரும்புவதுதான் காணப்படுகிறது.

மனிதர் வேலை செய்யவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். ஆதி 2:15. அந்த வேலையை நம் வாழ்வின் மையமாக மாற்றும்போதுதான் பிரச்சினை வருகிறது. சாலொமோன் அந்தத் தவற்றைத்தான் செய்தார். தன்னுடைய நடவடிக்கைகளில் ஓரளவுக்கு வெற்றிகிடைப்பதாக முதலில் தெரிந்தாலும் இறுதியில், அவை எல்லாம் அர்த்தமற்றவை என்பதைப் புரிந்துகொண்டார்.

தான் வீட்டில் செலவிட்டதை விட அதிகமான நேரத்தை அலுவலகத்தில் செலவிட்டிருக்க வேண்டும் என்று தங்களுடைய வாழ்க்கையின் இறுதியில் எத்தனை பேர் சொல்வார்கள்? இந்த கேள்வி என்ன முக்கியமான செய்தியை நமக்குத் தருகிறது?

# வெள்ளி  ஏப்ரல் 12

## மேலும் படிக்க:

சுயாதீன சித்தத்தின் நிஜம்பற்றி, வேதாகமம் முழுவதிலும் பார்க்கிறோம். பாவம் செய்யாதபோதே, ஆதாம் ஏவாளுக்கு சுயாதீன சித்தம் இருந்தது. ஆனால், அதை தவறாகப்பயன்படுத்தினார்கள். பாவமில்லாத சூழ்நிலையிலேயே, சுயாதீன சித்தத்தை தவறாக பயன்படுத்த முடிந்தது என்றால், இப்போதும் அந்த வாய்ப்பு இருக்கிறதல்லவா?

சுயாதீன சித்தம், மெய்யாகவே சுயாதீனம் உள்ளதுதான். நாம்தான் தெரிவு செய்யவேண்டும். சோதனை நமக்கு உள்ளே இருந்து வந்தாலும், வெளியே இருந்து வந்தாலும், தீர்மானம்செய்வது நம்முடைய உரிமைதான். நம்மில் இருக்கிற தேவ வல்லமையினால், தேவன் நமக்குத் தந்திருக்கிற உரிமையைப் பயன்படுத்தி சரியான தீர்மானத்தை நாம் செய்யலாம். தனக்கு தேவன் தந்த உரிமையைப் பயன்படுத்தி, காயின் செய்த கொலையால், அவனுடைய குடும்பம் எவ்வளவு பாதிக்கப்பட்டது! யோசேப்பின் சகோதரர்கள், தங்கள் சகோதரனை அடிமையாக விற்றதும், அவர்களுடைய விருப்பத்தின்படிதானே நடந்தது. அது எவ்வளவாய் அவர்கள் தகப்பனைப் பாதித்தது! 'யாக்கோபு அதைக்கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது. யோசேப்பு பீறுண்டுபோனான் என்று புலம்பி, தன் வஸ்திரங்களைக்கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான். அவனுடைய குமாரர், குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில், பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய், அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.' ஆதி 37: 33–35.

தனிமனிதர்கள் தங்கள் சுயாதீன சித்தத்தால் செய்கிற தீர்மானங்கள் நன்மைக்கோ, தீமைக்கோ அவர்கள் குடும்பங்களையும் பாதித்திருக்கின்றன. எண் 16:1– 32; தானி 6: 23, 24; ஆதி 18:19.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இன்று நீங்கள் செய்த விருப்பத்தெரிவுகள் யாவை? தேவனோடும் மனிதரோடும் உங்களுக்கு உள்ள உறவுபற்றி அவை என்ன சொல்கின்றன? எந்தத் தீர்மானங்களை வேறு விதத்தில் செய்திருக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?*
2. *தவறான தெரிவுகளைச் செய்த வேத நபர்கள் வாழ்க்கையிலிருந்து, நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? அவர்களுடைய தெரிவுகள் எவ்வாறு அவர்கள் குடும்பங்களையும் பாதித்தன?*
3. *நாம் எல்லோருமே தவறான தெரிவுகளைச் செய்து, அதற்காக வருந்தியிருப்போம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சுவிசேஷம் ஏன் நற்செய்தியாக இருக்கிறது? எந்த வேதாகம வாக்குறுதிகளை நீங்கள் உரிமைகொண்டாடினீர்கள்?*
4. *திருமணத்தைப் பற்றி உங்களிடம் ஆலோசனை கேட்க யாராவது வந்தால், என்ன ஆலோசனை தருவீர்கள்? இந்த முக்கியமான தீர்மானத்தைச் செய்வதற்கு வேதாகமத்திலிருந்து என்ன நெறிகளைச் சுட்டிக்காட்டுவீர்கள்?*

# வெடிகுண்டுகளைப் பொருட்படுத்தாதவர்

**கரோலின் அஸோ**

ஆப்ரிக்காவில் மக்கள் பசியால் வாடுகிறார்கள் என்கிற செய்தியைக் கேட்டு, மன முடைந்தார் மார்செலோ டார்னெல்ஸ். பிரேசிலில் வசதியாக வாழ்ந்து வந்தவர் அதை விட்டுவிட்டு, மொசம்பிக், அங்கோலா, ஈராக் போன்ற போர்ப்பகுதிகளுக்கு அட்ரா (*ADRA*) நிவாரண உதவியை வழங்குவதற்காகச் சென்றார்.

வெடிகுண்டுகள், தகிக்கும் சூடு, பயங்கர குளிர், கொட்டும் மழை ஆகியவற்றிற்கு மத்தியில் மனிதாபிமான தொண்டுகளைச் செய்துவருபவர் என்று 48 வயதான அவரைப் பார்ததும் சொல்லிவிடலாம்.

அதில்தான் அவர் பூரண நிம்மதியும் அடைந்தார்.

“வசதியாக வாழ்ந்வந்தேன். 1990இல் மனதில் பாரமுண்டானது. போரினால் சோமலியா, எத்தியோப்பியா நாடுகளில் மக்கள் பசியால் வாடும் படங்களைப் பார்த்தபோது அவர்களுக்கு உதவவேண்டும் என்கிற ஆவல் ஏற்பட்டது. தேவன் என்னை அழைப்பதை உணர்ந்தேன்” என்று சொன்னார் டார்னெல்ஸ். அவர் எர்பில் எனும் ஈராக்கிய நகரத்தில் அட்ரா குர்டிஸ்டானின் (*ADRA Kurdistan*) இயக்குனராகப் பணியாற்றுகிறார்.

போர் மற்றும் வறட்சியால் மொசம்பிக்கில் இடம்பெயர்ந்த 100 கிராமத்தினருக்கு உணவு வழங்க அட்வென்டிஸ்ட் ரிலீஃப் அன்ட் டெவலப்மன்ட் ஏஜென்சி (*ADRA*) திட்டமிட்டிருந்தது. முதன்முதலாக அந்தப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார் டொர்னெல்ஸ். 1997 முதலே உள்நாட்டு போரால் அந்த நாடு அவதிப்பட்டு வந்தது, 1992 இல்தான் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

“நான் நினைத்திருந்ததைவிட அங்கு நிலைமை மோசமாக இருந்தது. ஆனாலும் முன்வைத்த காலை நான் பின்வைக்க விரும்பவில்லை” என்றார் டொர்னெல்ஸ்.

மொசம்பிக்கில் எட்டு மாதங்கள் வேலைசெய்தார்; தொடர்ந்து அந்தப் பணியைச் செய்யவேண்டுமென்கிற ஆர்வம் மேலிட்டது. ஆனால் அவருடைய அம்மா சுகமில்லாமல் போனதால் உடனே பிரேலிக்குத் திரும்பினார். அடுத்து அங்கோலாவுக்கு அனுப்பினார்கள். 27 வருட உள்நாட்டுப் போர்ப்பகுதி. மக்கள் சூக்களையும், நாய் சடலங்களையும் தின்றதைப் பார்த்து நெஞ்சு படபடத்தது. 1993இல் ஓர் இராணுவ நடவடிக்கையின் போது பட்டினிகிடந்த 20 பிள்ளைகளைக் காப்பாற்றி, தன் வீட்டில் வைத்து கவனித்தார்.




ஆதரவற்ற 200 பிள்ளைகளை மலாஞ்சில் அட்வென்டிஸ்ட் குடும்பத்தினரும் தங்கவைக்க அட்ரா முயற்சி எடுத்ததும். அதற்கும் உதவினார்.

**2016இல், ஈராக்கிற்கு அனுப்பப்பட்டார் டொர்னெல்ஸ். இவர் ஒரு மாமனிதர்.**